விலை ரூபா: 10.00

Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி

Valampurii

பக்கங்கள்: நான்கு

ராம்கோ MADRAS CEMENTS LTD RAMCO CEMENT RAMCO
ஆசியாக் கண்டத்தில் முதலாம்தரத் தொழிற் சாலையிலிருந்து தயாரிக்கப்பட்டது.
ராம்கோ சீமெந்து

சங்கு 08 வள்ளுவர் ஆண்டு 2037 மார்கழி 07 வெள்ளிக்கிழமை (22.12.2006) தொலைபேசி 222 3378, 222 7644 ஒலி 03

# யாழ். மக்களின் தேவைகளை நிறைவேற்ற உடனடி நடவடிக்கை

## அரச உயர் மட்டக்குழுவினர் யாழ். நூலகத்தில் கூடி ஆராய்வு

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணத்தில் இயல்பு வாழ்க்கையை ஏற்படுத்துவதற் கும் அத்தியாவசிய உணவுப் பொருட்களை யாழில் முழுமை யாக விநியோகிப்பதற்கும் உடனடி நடவடிக்கை எடுத்துள்ள தாக ஜனாதிபதி செயலகம் தெரிவித்துள்ளது.

யாழ்.பொது நூலக கேட்போர் கூடத்தில் சர்வதேச விவகாரங்க ளுக்கான ஜனாதிபதியின் ஆலோசகர் பசில் ராஜபக்ஷ தலைமை யில் நேற்று முக்கிய மாநாடு ஒன்று நடைபெற்றது.

சுமார் மூன்று மணிநேரம் நடைபெற்ற இம் மாநாட்டில் முக் கிய 16 துறைகள் தொடர்பில் எழுந்துள்ள பிரச்சினைகள் குறித்து ஆராயப்பட்டுள்ளதாக ஜனாதிபதி செயலகம் விடுத்துள்ள செய் திக்குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (04 ஆம் பக்கம் பார்க்க)



## சர்வகட்சி பிரதிநிதிகள் குழுவில் ஹெல உறுமய அங்கம் வகிக்கும்

### அதன் பிரதிநிதி தகவல்

(கொழும்பு)

சர்வகட்சி பிரதிநிதிகள் குழுவில் தொடர்ந்து அங்கம் வகித்து அந்த குழுவின் அறிக்கை களை தோல்விஅடைய செய்வதற்கு நட வடிக்கை எடுக்கப்படும் என ஜாதிக ஹெல உறுமய தெரிவிக்கின்றது.

இந்த நடவடிக்கை இனத்தின் தேவை என்றும் இந்த யுத்தத்தின் சவால் எனவும் கருதியுமே அக்குழு அறிக்கையை தோல்வி அடைய செய்ய நடவடிக்கை எடுக்கப்படும் என்று ஜாதிக ஹெல உறுமய கட்சிசார்பில் சர்வகட்சி பிரதிநிதிகள் குழுவில் அங்கம் ... அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

சர்வகட்சி பிரதிநிதிகள் குழுவில் இருந்து மக்கள் விடுதலை முன்னணி விலகியுள்ள நிலையில் தாங்கள் தொடர்ந்து அந்த குழு வில் அங்கம் வகிக்க தீர்மானித்ததாக அந்த அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

சர்வகட்சி பிரதிநிதிகுழுவிற்கு ஒத்துழைப்பு வழங்க ஜனாதிபதியால் நியமிக்கப்பட்டுள்ள புத்திஜீவிகள் சமர்பித்த ஆலோசனைகளை நிராகரித்து விட்டு குழுவில் இருந்து விலகு வது பிரபல்யமாக தமக்கு கிடைக்கும் வெற்றி

## வாகரையிலிருந்து 76,990 பேர் இராணுவ பகுதிக்கு இடம் பெயர்வு

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு, வாகரையில் புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதியிலிருந்து இதுவரை 76 ஆயிரத்து 990 பேர் படையினரின் கட்டுப் பாட்டுப் பகுதிக்குள் சென்றுள்ளனர்.

கடந்த இரு நாட்களில் மாத்திரம் சுமார் 5 ஆயிரம் பேர் மட்டக்களப்பு நகரப் பகுதிக்கு சென்றுள்ளனர்.

இடம் பெயர்ந்துள்ள இவர் களில் 11 ஆயிரத்து 275 குடும்பங்களைச் சேர்ந்த 44 ஆயிரத்து 191 பேர் வாழைச்சே னை, மட்டக்களப்பு, செங்கலடி, களுவாஞ் சிக்குடி, கிரான் ஆகிய செயலகப் பிரிவிலுள்ள 36 ... சுமார் 30 ஆயிரம் பேர் உறவினர், நண் பர்களின் வீடுகளில் தங்கியுள்ளனர். வாக ரை புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதியில் மொத்தமாக 5 ஆயிரத்து 526 குடும்பங் களைச் சேர்ந்த 21 ஆயிரத்து 154 பேர் மாத் திரமே உள்ளதாகவும், அவர்களும் தொடர்ந்து படையினரின் கட்டுப்பாட்டிலுள்ள பகுதிகளை நோக்கி இடம் பெயர்ந்து வருகின்றனர்.

மட்டக்களப்பு நகரில் மாத்திரம் 13 முகாம் களில் சுமார் 8 ஆயிரம்பேர் தங்கியுள்ளனர். செங்கலடியில் 10 முகாம்களில் சுமார் 7 ஆயிரம் பேரும் வாழைச்சேனையில் 3 முகாம்களில் 5 ஆயிரம் பேரும் தங்கவைக்

இந்த நடவடிக்கை இனத்தின் தேவை என்றும் இந்த யுத்தத்தின் சவால் எனவும் கருதியுமே அக்குழு அறிக்கையை தோல்வி அடைய செய்ய நடவடிக்கை எடுக்கப்படும் என்று ஜாதிக ஹெல உறுமய கட்சிசார்பில் சர்வகட்சி பிரதிநிதிகள் குழுவில் அங்கம் வகிக்கின்ற உதய கம்பன்மில்ல விடுத்துள்ள சர்வகட்சி பிரதிநிதிகுழுவிற்கு ஒத்துழைப்பு வழங்க ஜனாதிபதியால் நியமிக்கப்பட்டுள்ள புத்திஜீவிகள் சமர்பித்த ஆலோசனைகளை நிராகரித்து விட்டு குழுவில் இருந்து விலகுவது பிரபல்யமாக தமக்கு கிடைக்கும் வெற்றி எனவும் அவ்வறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. (ச-133)

இடம் பெயர்ந்துள்ள இவர் களில் 11 ஆயிரத்து 275 குடும்பங்களைச் சேர்ந்த 44 ஆயிரத்து 191 பேர் வாழைச்சே னை, மட்டக்களப்பு, செங்கலடி, களுவாஞ் சிக்குடி, கிரான் ஆகிய செயலகப் பிரிவிலுள்ள 36 அகதி முகாம்களில் தங்கவைக்கப்பட்டுள்ளனர். மட்டக்களப்பு நகரில் மாத்திரம் 13 முகாம் களில் சுமார் 8 ஆயிரம்பேர் தங்கியுள்ளனர். செங்கலடியில் 10 முகாம்களில் சுமார் 7 ஆயிரம் பேரும் வாழைச்சேனையில் 3 முகாம்களில் 5 ஆயிரம் பேரும் தங்கவைக் கப்பட்டுள்ளதாக புள்ளிவிபர அறிக்கை யொன்றில் தெரிவிக்கப்படுகிறது. (ச-5)

# அரச பாடசாலை மாணவர்கள் தேசிய மொழியை கற்பது அவசியம்

## கல்வி அமைச்சு அறிவிப்பு

அரசாங்கப் பாடசாலை மாணவர்கள் அனைவரும் தேசிய மொழியை கற்பது கட்டாயமாக்கப்பட்டுள்ளது. அதன்படி சிங்கள மூலமான மாணவர்கள் இரண்டாவது மொழியாக தமிழ் மொழியையும், தமிழ் மொழிமூலமான மாணவர்கள் இரண்டாவது மொழியாக சிங்கள மொழியையும் கற்க வேண்டும். 6 ஆம் ஆண்டு முதல் 9 ஆம் ஆண்டு வரை அனைத்து மாணவர்களும் இரு மொழி களையும் கற்க வேண்டுமென்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

10 ஆம் 11 (04 ஆம் பக்கம் பார்க்க)

# திருமலைக் கப்பலில் இளம் பெண் மரணம்

திருகோணமலையில் இருந்து காங்கே சன்துறை துறைமுகத்திற்கு பயணிகளை ஏற்றி வந்த கப்பலில் பயணம் செய்த இளம் பெண் ஒருவர் மரணம் அடைந்துள்ளார்.

உடுவில் முருகமூர்த்தி கோவிலடியைச் சேர்ந்த கோபால் சிவவதனி (வயது 29) என்பவரே கப்பலில் பயணிக்கும்போது மரணம் அடைந்ததாக தெரிவிக்கப்பட்டது.

குறிப்பிட்ட கப்பலில் பயணம் செய்வதற்கு வேண்டிய முதலுதவி வசதிகள், உணவகம் உட்பட ஏனைய வசதிகளும் இல்லாததாலே யே இச் சம்பவம் இடம் பெற்றுள்ளது.

மரணம் அடைந்தவரின் சடலம் பிரேத பரிசோதனைக்காக (04 ஆம் பக்கம் பார்க்க)

# இந்தியப் பிரதமரை கூட்டமைப்பினர் சந்திப்பர்?

(சென்னை)

இந்தியா சென்றுள்ள தமிழ்த்தேசிய கூட்டமைப்பினர் இந்தியப் பிரதமர் மன்மோகன் சிங்கை சந்திக்க ஏற்பாடுகள் நடைபெறுவதாக தெரிவிக்கப்பட்டது.

இதற்கான நடவடிக்கைகளை தமிழக அரசியல் தலைவர்கள் மேற்கொண்டு வருவதாக தெரிவிக்கப்பட்டது.

நேற்று இச் சந்திப்பு இடம் பெறவிருந்ததாக தெரிவிக்கப்பட்டபோதிலும் அச் சந்திப்பு இடம் பெறவில்லை. (ச)

# மலையகத்தில் தீவிரவாதிகள் ஊடுருவ வழி ஏற்படுத்துகிறது ஜே.வி.பி.

## ஜாதிக ஹெல உறுமய குற்றச்சாட்டு

மலையகத்தில் தீவிரவாதிகள் ஊடுருவ ஜே.வி.பி.வழி ஏற்படுத்துகிறது என்று ஜாதிக ஹெல உறுமய கண்டனம் தெரிவித்துள்ளது.

மலையகத் தோட்டத் தொழிலாளர்களின் ஊதிய ஒப்பந்தங்கள் தொடர்பில் தொழிலாளர்களை ஜே.வி.பியும் மார்க்சிஸ்ட் குழுக்களும் தூண்டி விடுகின்றன.

வாகரை மற்றும் சேருநுவர பகுதிகளில் இராணுவத்தினர் மேற்கொண்டு வரும் நடவடிக்கைகளைச் சீர்குலைக்கும் வகையில் சதியின் ஒரு பகுதியிது.

மலையகத்தில் நிலைமையை சீர்குலைப்பதன் மூலம் கிழக்குப் பகுதியில் யுத்தம் நடைபெறும் பிரதேசங்களிலிருந்து தீவிரவாதக்குழுவினர் மலையகப் பகுதியில் ஊடுருவுவதற்கான சூழ்நிலையை இது உருவாக்கும்.

இந்த கட்சிகள் எவையுமே மலையகத்திலிருந்து இடம் (04 ஆம் பக்கம் பார்க்க)

# யாழில் நேற்று முதல் 24 மணிநேர மின்சாரம்

(யாழ்ப்பாணம்)

யாழ்.குடாநாட்டில் நேற்று முதல் 24 மணிநேர மின்சாரம் வழங்கப்பட்டு வருவதாக யாழ்.சிவில் ஒருங்கிணைப்பு அதிகாரி கேணல் பெரேரா தெரிவித்தார்.

24 மணிநேர மின்சாரம் வழங்குவதற்குத் தேவையான எரிபொருள் சீராக எடுத்து வருவதற்கு ஒழுங்கு செய்யப்பட்டதையடுத்தே மின்சாரம் வழங்கும் நேரம் அதிகரிக்கப்பட்டுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டார். (ச-5)

## திருவாசக விழா

(பருத்தித்துறை)

தொண்டமானாறு சந்நிதியான் ஆச்சிரமத்தில் வருடாந்த திருவாசக விழா இம் மாதம் 29 ஆம் திகதி நடைபெறவுள்ளது.

அத்தோடு அன்றைய தினம் ஞானச் சுடர் 108–வது மலர் வெளியீடும் இடம்பெறும். இம் மலரின் வெளியீட்டுரையை சமாதான நீதிவான் எஸ்.தேவதாஸனும் மதிப்பீட்டுரையை கோப்பாய் ஆசிரிய பயிற்சிக் கல்லூரி அதிபர் ஆ.சிறிஸ்கந்தமூர்த்தியும் நிகழ்த்தவுள்ளனர். (ச–52)

## முருக நாம பஜனை

(பருத்தித்துறை)

தொண்டமானாறு சந்நிதியான் ஆச்சிரமத்தில் இன்று காலை 10.30 மணிக்கு முருக அடியார்களின் முருக நாம பஜனை நடைபெறவுள்ளது. (ச–52)

## திருவெம்பாவை விழா

(யாழ்ப்பாணம்)

தெல்லிப்பழை ஸ்ரீ துர்க்கா தேவி தேவஸ்தானத்தில் திருவெம்பாவை விழா எதிர்வரும் 25 ஆம் திகதி திங்கட்கிழமை ஆரம்பமாகி அடுத்த மாதம் மூன்றாம் திகதி புதன்கிழமை நிறைவடையவுள்ளது. (ச–9)

## சிறுவர் நட்புறவு சங்கமம்

(யாழ்ப்பாணம்)

அறவழி சிறுவர் நட்புறவுச் சங்கமம் நிகழ்வு சீடா/பீற் நிறுவனங்களின் அனுசரணையுடன் அறவழிப் போராட்டக் குழுவினால் எதிர்வரும் 30 ஆம் திகதி சனிக்கிழமை காலை 9.30 மணிக்கு கைதடி நுணாவில் அ.த.க.பாடசாலையில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக பீற் யாழ்ப்பாண மாவட்ட இணைப்பாளர் க.மயூரனும் சிறப்பு விருந்தினராக அறவழிப் போராட்டக் குழுத் தலைவர் டாக்டர் எஸ்.எஸ். அருளானந்தம், சிறுவர்களுக்கான அபிவிருத்தி நிலைய செயலாளர் அ.பாலதயானந்தன், கைதடி நுணாவில் கிராம அலுவலர் க.மகேந்திரம், கைதடி நுணாவில் த.க.பாடசாலை அதிபர் த.தெய்வேந்திரமூர்த்தி ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர். (ச–9)

## சோனியாவுக்கு பாராட்டுத் தெரிவித்து தந்தி அனுப்புமாறு கோரிக்கை

### திராவிடர் கழகத் தலைவர் வீரமணி தெரிவிப்பு

(சென்னை)


இலங்கை இராணுவத்திற்கு எந்த ஆயுதங்களும் அனுப்ப மாட்டோம் என்று கடிதம் எழுதியுள்ள சோனியா காந்திக்குப் பாராட்டுத் தெரிவித்து தந்திகளை அனுப்புமாறு திராவிடர் கழகத் தலைவர் சீ.வீரமணி கோரியுள்ளார்.

இது குறித்து அவர் விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது;

இலங்கையில் இந்த ஆண்டும் மூன்று ஆயிரம் பேர் பலியாகிவிட்டனர். 35 ஆயிரம் பேருக்கு மேல் வீடிழந்து தவிக்கின்றனர். சிங்கள இராணுவம் குண்டு மழை பொழிந்து வருகின்றது.

அப்பாவிப் பொதுமக்கள் மீது தாக்குதல் நடத்தாதீர்கள் என்று ஐ.நா.மன்றம் விடுத்துள்ள வேண்டுகோளையும் ஏற்க மறுக்கின்றது.

இந்த நிலைக்கு ஒரு முற்றுப்புள்ளி வைக்க முனைய முன்வர வேண்டும். முதலமைச்சர் கருணாநிதி, ஐக்கிய முற்போக்கு கூட்டணித் தலைவர் சோனியா காந்தியிடம் தமிழர்களின் மன நிலையை டெல்லி



சென்ற போது தெரிவித்தது ஓரளவு பயன்பட்டிருக்கின்றது.

இந்த நடவடிக்கைக்காக முதல்வருக்கும் சோனியா காந்திக்கும் பிரதமருக்கும் நாம் வெறும் வார்த்தைகளால் நன்றி என்று மட்டும் கூற முடியாது.

சோனியா காந்திக்கும் பிரதமருக்கும் தந்திகள், மின்னஞ்சல் செய்திகள், தொலைப் பதிவுகள் போன்றவற்றை ஏராளம் அனுப்புங்கள். (ச)

## நெடுந்தீவு உதவி அரசாங்க அதிபர் பிரிவில் சமுர்த்தி முத்திரை பெறுவோருக்கு உதவி

### கரித்தாஸ்-கியூடெக் நிறுவனம் வழங்கியது



(யாழ்ப்பாணம்)

நெடுந்தீவு உதவி அரசாங்க அதிபர் பிரிவிலுள்ள சமுர்த்தி முத்திரை பெறும் 500 குடும்பங்களுக்குக் கரித்தாஸ்–கியூடெக் நிறுவனம் உலர் உணவுக்கான உதவிகளை வழங்கியுள்ளது.

செப்ரெம்பர் மாத சமுர்த்தி முத்திரைப் பெறுமதிக்கு மேலதிகமாக அரச அதிபரினால் பல நோக்குக் கூட்டுறவுச் சங்கங்கள் மூலம் விநியோகிக்கப்பட்ட பொருள்களுக்கான பெறுமதியை கரித்தாஸ்–கியூடெக் நிறுவனம் வழங்கியுள்ளது.

இதன்படி 500 குடும்பங்களுக்கான கொடுப்பனவாக 2லட்சத்து 70 ஆயிரத்து 533 ரூபாவை அந்த நிறுவனம் வழங்கியுள்ளது. (ச)

## பால்மா விநியோகம்

(யாழ்ப்பாணம்)

யாழ்.பலநோக்குக் கூட்டுறவுச் சங்க மருந்தகத்தில் குழந்தைகளுக்கான பால்மா மற்றும் கொழுப்பு நீக்கிய பால்மா ஆகியன வழங்கப்படுகின்றன.

யாழ்.பலநோக்குக் கூட்டுறவுச் சங்க எல்லைக்குட்பட்டவர்கள் பங்கீட்டு அட்டையையும் ஆவணங்களையும் காண்பித்து பால்மா வகைகளைப் பெற்றுக் கொள்ளலாம். (ச)

## மண்ணெண்ணெய் விநியோகம்

(யாழ்ப்பாணம்)

நவம்பர், டிசம்பர் மாதங்களுக்கான மண்ணெண்ணெயை இதுவரை பெற்றுக் கொள்ளாதவர்கள் தங்களுக்கு ஒதுக்கப்பட்ட எரிபொருள் நிரப்பு நிலையங்களில் அம் மாதங்களுக்குரிய மண்ணெண்ணெயைப் பெற்றுக் கொள்ளலாம் என பிரதேச செயலர் பி.செந்தில்நந்தனன் அறிவித்துள்ளார். (ச)

## உணவகங்களுக்கான உலர் உணவு வழங்கல்

(யாழ்ப்பாணம்)

அரசாங்க அதிபரினால் யாழ்.பிரதேச செயலர் பிரிவில் இயங்கும் உணவகங்களுக்கு விநியோகிப்பதற்காக ஒரு தொகுதி அரிசி, பருப்பு ஆகிய பொருள்கள் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளன.

இப் பொருள்களை யாழ்.பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்தில் பெற்றுக் கொள்ளலாம் என பிரதேச செயலர் பி.செந்தில்நந்தனன் தெரிவித்துள்ளார். (ச)

## நேர்முகப் பரீட்சை

யாழ்.உயர் தொழில் நுட்ப நிறுவனத்தில் கடந்த 11 ஆம் திகதி நடாத்தப்பட்ட உயர் தேசிய தகவல் தொழில் நுட்ப டிப்ளோமாப் பரீட்சைப் பெறுபேறுகளுக்கு அமைய 78 பேர் நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப்பட்டுள்ளனர்.

அவர்களுக்கான கடிதங்கள் தபாலில் சேர்க்கப்பட்டுள்ளதாக நிறுவன இயக்குநர் பி.கருணாநிதி அறிவித்துள்ளார். (ச)

## திருவெம்பாவைக் காலத்தில் பஜனை பாட அனுமதிக்கவும்

### இந்துமா மன்றம் கோரிக்கை

(யாழ்ப்பாணம்)

திருவெம்பாவைக் காலத்தில் பக்தர்கள் ஆலய வழிபாட்டிற்குச் செல்வதற்கும் திருவெம்பாவைப் பாடல்களைப் பாடியவாறு வீதிகளில் செல்வதற்கும் இராணுவம் அனுமதிக்க வேண்டும் என அகில இலங்கை இந்துமா மன்றம் கோரியுள்ளது.

இது தொடர்பாக அவ்வமைப்பு ஜனாதிபதிக்குக் கடிதம் ஒன்றை அனுப்பி வைத்துள்ளது.

திருவெம்பா இந்துக்களுக்கு ஒரு முக்கியமான நிகழ்வு. இந்நிகழ்வு டிசம்பர் 25 ஆம் திகதி தொடக்கம் பத்து நாட்கள் நடைபெறும்.

இந்நிலையில் பக்தர்கள் கோவிலுக்குச் சென்று வழிபாட்டில் ஈடுபட நடவடிக்கை எடுக்குமாறு கோரியுள்ளது.

இதேவேளைபொருத்தமான கோவிலிலிருந்து அரச ஊடகங்களில் இலவசமாக ஒளி, ஒலிபரப்புச் செய்ய நடவடிக்கை எடுக்குமாறும் கோரிக்கை விடப்பட்டுள்ளது. (ச–5)


## எழுத்தாளர் வரதரரசன் காலமானார்

(யாழ்ப்பாணம்)

ஈழத்து இலக்கிய உலகின் பிரபல எழுத்தாளரும் நூல் வெளியீட்டாளருமான தியாகர் சண்முகம் வரதராசன் நேற்று தனது 82 ஆவது வயதில் காலமானார்.

வரதர், வரன் என்ற புனைப் பெயர்களில் சிறுகதைகள், குறுநாவல்கள், கவிதைகள், நூல்கள், சஞ்சிகைகள் என அவர் எழுதியுள்ளார்.

தனது எழுத்து வரலாற்றில் 29 சிறுகதைகள், மூன்று குறுநாவல்கள், மூன்று கவிதைகள், ஆறு ஆக்கங்கள், ஏழு சஞ்சிகைகள் மற்றும் 33 நூல்களை எழுதியுள்ளார். இவர் மூன்று பெண் பிள்ளைகளின் தந்தையாவார். (ச–133)



## பாலாவின் மறைவு ஏற்படுத்தும் கவலைகள் தினமணி நாளிதழின் கட்டுரையில் தெரிவிப்பு



(சென்னை)

தமிழீழ விடுதலைப்புலிகள் இயக்கத்தின் அரசியல் ஆலோசகர் சித்தாந்தவாதி என்று போற்றப்பட்ட அன்ரன் பாலசிங்கத்தின் மறைவு இலங்கை இனப்பிரச்சினைக்குத் தீர்வு காணும் சமாதான முயற்சிகளுக்கு பின்னடைவை ஏற்படுத்துமோ என்ற கவலை தோன்றியுள்ளது.

அன்ரன் ஸ்தானிஸ்லாஸ் பாலசிங்கம் தொடக்கத்தில் வீரகேசரி நாளேட்டில் பணிபுரிந்தவர். அதன் பின் பிரிட்டிஷ் தூதரகத்தில் மொழிபெயர்ப்பாளராகவும் இருந்திருக்கின்றார்.

அவரது பின்னணியே புதுமையானது. பாலசிங்கத்தின் தந்தை இலங்கை கிழக்குப் பகுதியையும் தாய் வடக்குப் பகுதியையும் சேர்ந்தவர்கள்.

தந்தை ஹிந்து, தாய் கிறிஸ்தவர். சிங்கள இனவாதத்தை எதிர்க்கும் புலிகள் அமைப்பைச் சேர்ந்த அவருக்கு புத்தரின் தத்துவங்கள் மீதும் ஈடுபாடு உண்டு.

பாலசிங்கத்தின் தாத்தா கோவில் குருக்களாகவிருந்தவர் என்பது இன்னொரு சுவையான தகவல். வீரகேசரியில் பணியாற்றிய பாலசிங்கம் சிறிது காலத்தில் அந்தப் பத்திரிகையின் வெளிநாட்டுச் செய்திப் பகுதிகளின் பொறுப்பாளராக நியமிக்கப்பட்டார்.

இது உலகளாவிய தகவல்கள் மீது அவருக்கு ஏற்கனவேயிருந்த தாக்கத்தை அதிகரிக்கச் செய்தது. அதன் பிறகு கொழும்பில் பிரிட்டிஷ் தூதரகத்தில் மொழிபெயர்ப்பாளராகப் பணியில் சேர்ந்தார்.

அப்போது யாழ்ப்பாணத் தமிழ்ப் பெண்ணைக் காதலித்து மணந்து கொண்டார்.

ஆனால் மனைவி நோய் வாய்ப்பட்டதால் அவருக்குச் சிகிச்சையளிப்பதற்காக பிரிட்டன் செல்ல நேர்ந்தது.

முதல் மனைவி சில ஆண்டுகளில் நோய் முற்றி பிரிட்டனில் இறந்தார். அங்கே ஒரு மருத்துவமனையில் பணியாற்றி வந்த அடேல் ஆனி என்ற அவுஸ்திரேலிய பெண்ணின் நட்பு காதலாக மாறி பின்னர் திருமணமாக மலர்ந்தது.

பாலசிங்கத்தைப் போலவே அடேலும் அறிவுஜீவி. இருவரும் யாழ்ப்பாணம் திரும்பிய போது விடுதலைப்புலிகள் இயக்கத்துக்காகப் பாடுபட்டனர்.

விடுதலைப்புலிகளுக்கும் இலங்கை அரசுக்கும் சமாதானப் பேச்சுவார்த்தை நடந்த போதெல்லாம் முக்கிய பங்கையாற்றி வந்தவர் பாலசிங்கம்.

இலங்கை இனப்பிரச்சினையில் போராளிகளுக்கு முதன்முறையாக அங்கீகாரம் கிடைத்தது 1985இல் நடந்த திம்புப் பேச்சுவார்த்தையில்தான். அதில் ஈழப் போராளிக் குழுக்கள் முன்வைத்த கோரிக்கைகள் தனித் தமிழீழக் கோரிக்கைக்கு மாற்றாக அமைந்தன.

(வளரும்)

## சிக்கின்குனியா இலவச மருத்துவ முகாம்

யாழ்.லயன்ஸ் கழகத்தின் ஆதரவில் எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமை அரியாலை சன சமூக நிலையத்தில் இலவச மருத்துவ முகாம் காலை 9 மணிமுதல் பிற்பகல் ஒரு மணி வரை நடைபெறவுள்ளது.

வட்டுக்கோட்டை லயன்ஸ் கழகம் நடத்தும் சிக்கின்குனியா இலவச மருத்துவ முகாம் நாளை மறுதினம் காலை 9 மணி முதல் பிற்பகல் 12 மணி வரை வட்டுக்கோட்டை லயன்ஸ் கழகச் செயலகத்தில் நடைபெறவுள்ளது. வைத்தியகலாநிதி சி.சதாசிவம் தலைமையில் இம் மருத்துவ முகாம் நடைபெறவுள்ளது. (ச–5)

## கலைமாணிப் பொதுப் பரீட்சை ஏப்ரல் மாதம் நடைபெறும்

பேராதனைப் பல்கலைக்கழகத்தினால் நடத்தப்படும் வெளிவாரி மாணவர்களுக்கான கலைமாணி பொது பட்டப் பரீட்சை அடுத்த ஆண்டு ஏப்ரல் மாதத்தில் நடைபெறவுள்ளதாக பல்கலைக்கழகப் பதிவாளர் அறிவித்துள்ளார்.

இப்பரீட்சைக்கான விண்ணப்பப் படிவங்களை பேராதனைப் பல்கலைக்கழகத்தின் வெளிவாரிப் பரீட்சைப் பிரிவில் எதிர்வரும் ஜனவரி மாதம் 10 ஆம் திகதிவரை நேரடியாகவும் தபால் மூலமாகவும் பெறமுடியும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (ச)

உள்ளத்தில் உதிக்கும் உண்மையான எண்ணத்தை யார் யார் வெளியிட மறுக்கிறார்களோ–மறுக்கப்படுகிறார்களோ– அவர்கள் நாகரிகத்தின் எதிரிகளாவர்.

*–இங்கர்சால்*

வலம்புரி

# பதில் நீதிவானின் எச்சரிக்கை கவனத்தில் எடுக்கப்பட வேண்டும்

சீரான பராமரிப்பின்மையால் வயோதிபர்கள் உயிரிழக்கின்றனர். இவ்வாறு யாழ்.மாவட்ட பதில் நீதிவான் மு.திருநாவுக்கரசு கூறியுள்ளார்.

நீரிழிவு, ஆஸ்மா, இருதய நோயினால் பாதிக்கப்பட்டவர்களை சிக்கின்குனியாக் காய்ச்சல் தாக்குகின்றபோது அவர்கள் உயிரிழக்கும் அபாயத்துக்குச் செல்கின்றனர். இவ்வாறு பதில் நீதிவான் தான் மேற்கொண்ட மரண விசாரணைகளின் போது சுட்டிக்காட்டியுள்ளார்.

ஏற்கனவே சிக்கின்குனியாக் காய்ச்சல் காரணமாகப் பலர் உயிரிழந்த போதிலும் யாழ். போதனா வைத்தியசாலை நிர்வாகமும் மாகாணப் பிராந்தியச் சுகாதார சேவைகள் பணிமனையும் அது பற்றிய தரவுகளை வெளிப்படுத்தவில்லை என்றே கூறவேண்டும்.

சிக்கின்குனியாவால் உயிரிழப்பு ஏற்படாது எனக் கூறுவதில் எத்துணை தவறு உண்டென்பதை பொதுமக்கள் நன்கு அறிந்து கொள்வர்.

ஏனெனில் சிக்கின்குனியாக் காய்ச்சலால் தமிழகத்தில் பாதிக்கப்பட்டவர்களின் பெயர் விபரம் மற்றும் உயிரிழந்தவர்களின் பட்டியல் என அ.தி.மு.க. அக்குவேறு ஆணிவேறாக புட்டு வைத்திருந்தது.

எனவே சிக்கின்குனியாவின் தாக்கம் எத்தகையதென்பதை பொதுமக்கள் நன்கு உணர்ந்துள்ளனர்.

இந்த நிலையில் கடந்த ஐந்து தினங்களில் பத்திற்கும் மேற்பட்டவர்கள் உயிரிழந்துள்ளனர். அதிலும் யாழ்.போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு ஒரு சில மணித்தியாலங்களில் உயிரிழந்தவர்களின் மரண விசாரணைகளை மேற்கொண்ட பதில் நீதிவான் மு.திருநாவுக்கரசு அவர்கள், சீரான பராமரிப்பு இன்மையால் வயோதிபர்கள் உயிரிழக்கின்றனர் எனத் தெளிவுபடக் கூறியுள்ளார்.

பதில் நீதிவானின் மேற்போந்த கருத்தை யாழ்.போதனா வைத்தியசாலை மற்றும் அரச நிர்வாகம், வயோதிபர்களின் உறவினர்கள் சிர மேற்கொண்டு தத்தம் கடமையை ஆற்ற வேண்டும்.

போசாக்கு நிலை நலிந்துபோயுள்ள நிலையில் வயோதிபர்கள் சிக்கின்குனியாக் காய்ச்சலினால் இறப்பதென்பது அனுமதிக்க முடியாததாகும்.

முதியவர்கள் எமது மண்ணின் சொத்துக்கள். அவர்களைப் பாதுகாக்கும் பொறுப்பு இளம் சமுதாயத்திடமுண்டு. இதிலிருந்து விலகுவது பெரும் சாபத்துக்குரியதாகும்.

எனவே யாழ்.குடாநாட்டை வாட்டி வதைக்கும் சிக்கின்குனியாவின் தாக்கத்திலிருந்து முதியவர்களைக் காப்பாற்ற பொருத்தமான திட்டங்களை அமுல்படுத்தியாக வேண்டும்.

அதேநேரம் சிக்கின்குனியாக் காய்ச்சலால் ஏற்பட்ட மரணங்களை வெளிப்படுத்துவது யாழ்.போதனா வைத்தியசாலையின் தலையாய கடமையாகும்.

மரணமடைந்தவர்களின் எண்ணிக்கையை மறைப்பதன் ஊடாக விளைவுகள் பாரதூரமானதாக இருக்குமேயன்றி அதனால் வேறு என்ன தான் நடக்கும்?

ஆக, சிக்கின்குனியாவின் தாக்கத்திற்கு ஆளாகி ஆபத்தான இலக்கினராகக் கருதப்படக் கூடியவர்கள் மீது விசேட கவனம் செலுத்தும் நடவடிக்கைகளை முன்னெடுக்க வேண்டும்.

இதையே பதில் நீதிவானின் கருத்தும் வலியுறுத்துவதாகவுள்ளது.

# 5-ம் ஆண்டு புலமைப் பரிசில் பரீட்சை முன்னிலைப் பெறுபேறுகள் சில

(யாழ்ப்பாணம்)

ஐந்தாம் ஆண்டுப் புலமைப் பரிசில் பரீட்சையில் சித்தி பெற்ற முன்னிலைப் பாடசாலை மாணவர்களின் விபரங்கள் வெளியிடப்பட்டன. அவற்றில் சில வருமாறு,

**மானிப்பாய் இந்து மகளிர் கல்லூரி**

ரிசாயா(157), எஸ்.நவநீதா (156), பி.சர்மிளா(149), ஆர்.நிரோஜன்(146), கே.தனுசியா(146), ஆர்.கீர்த்திகா(144), ஆர்.தர்மிதா (144), கே.துவாரகா (142).

**யாழ்.மத்திய கல்லூரி**

சே.கஜன்(171–மாவட்ட நிலை 2 ஆம் இடம்), அ.அமுதன் (156), சி.சிவதர்ஷன் (154), க.றோஜினி (152), க.பகீரதன் (148), சூ.சிறிநாகசாஜினி(147), சோ.கம்ஷன்(143), க.கிரிஷாந்தன்(140), கி.ராம்குமார்(138), தி.திலக்ஷன்(138), பு.ரகுராமன் (136), கி.கிருஷாந்தன் (136), யோ.பினேக்சாந்(135), க.தனசாந் (134), வ.கஜீவன் (134), யூ.தனுஜன்(133).

**உடுவில் மகளிர் கல்லூரி**

சி.தேனுஜா (170), பி.நிதுஷன் (168), இ.ஆசுவன்(169), ர.கிஷோர்(165), செ.விருத்திகா(164), ஆ.ஏ.ஜெய்மியா(162), ச.பிரணவி(162), க.கிருஜா (161), ச.கஜன்(160), சி.தேனுகன் (158), அ.சீலன்(157), சி.ஆரமுதன்(154), சி.கீர்த்திகா(154), ந.கஜந்திகா (153), ம.குகாஜினி(153),

சி.வைஷ்ணவி (150), சி.அபிராமி (149), ம.ஹம்ஷனந்தினி(147), ஜெ.தர்ஷன்(146), இ.துஜிரகன் (145), இ.நிஷானா(140), த.துளசி(140), ச.பவப்பிரியா(139), யோ.ஸ்ரில்லா றோஷானி(138), சி.துஷ்யந்தன் (136), ம.டியோனி (134), சி.அஜந்தன் (133), ம.மகிஷா (133). (ச–5,9,133)

# விடுதலைப்புலிகள் உறுதிமொழி வழங்கினால் ஏ-9 வீதியூடாக பொருள்களை அனுப்பத் தயார்

## ஹெகலிய ரம்புக்வெல தெரிவிப்பு

(கொழும்பு)

பொதுமக்களுக்குத் தேவையான உணவுப் பொருள்களை ஏ–9 வீதியூடாக அனுப்புகின்ற பொழுது அதனைப்புலிகள் எடுக்கமாட்டார்கள் என்று உறுதிமொழி வழங்கினால் பொருள்களை ஏ–9 வீதியூடாக அனுப்புவதற்கு அரசாங்கம் தயாராகவிருக்கின்றது.

புலிகளின் உறுதிமொழியை சர்வதேச செஞ்சிலுவைச் சங்கம், யுத்தநிறுத்தக் கண்காணிப்புக் குழுவிடமிருந்து அரசாங்கம் எதிர்பார்த்துக் கொண்டிருக்கின்றது என்று பாதுகாப்பு விவகாரங்களுக்கான அரசாங்கப் பேச்சாளரும் அமைச்சருமான ஹெகலிய ரம்புக்வெல தெரிவித்தார்.

தமிழர்களின் பிரச்சினையைத் தீர்ப்பதற்கு அரசாங்கம் தேவையான நடவடிக்கையை எடுத்து வருகின்றது. தமிழர்களின் பிரச்சினையைத் தீர்ப்பதற்காக பிரபாகரனுடனும் புலிகளுடனும் மட்டுமே பேசவேண்டிய அவசியமில்லை.

அத்தோடு தமிழர்களின் பிரச்சினையை விரிவுபடுத்துவதற்கு ஜனாதிபதியும் அரசாங்கமும் ஒருபோதும் இடம் வழங்காது என்றும் அவர் சொன்னார்.

பண்டாரநாயக்க சர்வதேச ஞாபகார்த்த மண்டப கேட்போர் கூடத்தில் நேற்று முன்தினம் நடைபெற்ற ஊடகவியலாளர் மாநாட்டில் கலந்து கொண்டு கருத்துத் தெரிவித்த போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் தொடர்ந்து கருத்துத் தெரிவிக்கையில் மேலும் தெரிவித்ததாவது,

பொதுமக்களுக்குத் தேவையான உணவுப் பொருள்களை ஏ–9 வீதியூடாக அனுப்பும் போதுஅப்பொருள்களை எடுக்க மாட்டார்கள்என்ற உறுதிமொழியை விடுதலைப்புலிகளிடமிருந்து அரசாங்கம் எதிர்பார்த்துக் கொண்டிருக்கின்றது.

அந்த உறுதிமொழியை யுத்த நிறுத்தக் கண்காணிப்புக் குழு, சர்வதேச செஞ்சிலுவைச் சங்கத்தினூடாக அரசாங்கம் எதிர்பார்த்துக் கொண்டு இருக்கின்றது. ஆனால் அந்த உறுதிமொழி இன்று வரையிலும் கிடைக்கவில்லை. அந்த உறுதிமொழி கிடைத்தவுடனேயே அத்தியாவசிய பொருள்களை ஏ–9 வீதியூடாக அனுப்பி வைப்போம் என்றார் அவர். (ச–5)

# பல நோக்குக் கூட்டுறவுச் சங்கங்களில் வயோதிபர்களுக்கு முன்னுரிமை

## சமூக சேவைகள் அமைச்சு தெரிவிப்பு

(யாழ்ப்பாணம்)

பங்கீட்டு அட்டைகளுக்கான உணவுப் பொருள்களை வழங்கும் போது வயோதிபர்கள், கர்ப்பிணிப் பெண்கள் மற்றும் அங்கவீனமானவர்களுக்கு முன்னுரிமை வழங்குமாறு சமூக சேவைகள் மற்றும் சமூக நலத்துறை அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா யாழ்.குடாநாட்டிலுள்ள பல நோக்குக் கூட்டுறவுச் சங்கங்களின் நிர்வாகிகளுக்கும் கிளைச் சங்கங்களின் நிர்வாகிகளுக்கும் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

பங்கீட்டு அட்டைகளுக்கான உணவுப் பொருள்களைப் பெறுவதில் வயோதிபர்கள், கர்ப்பிணிப் பெண்கள் மற்றும் அங்கவீனமுற்றவர்கள் எதிர்நோக்கும் சிரமங்கள் குறித்து பலர் பல்வேறு முறைப்பாடுகளை முன்வைத்துள்ளனர்.

இந்த நிலையில் இந்த நபர்கள் முகம் கொடுக்கக் கூடிய சிரமங்களைத் தவிர்க்கும் வகையில் இவர்களுக்கு முன்னுரிமை வழங்கி தங்களது பணிகளை மேற்கொள்ளுமாறு சமூக சேவைகள் மற்றும் சமூக நலத்துறை அமைச்சு வெளியிட்டுள்ள செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ச)

# சடலம் அடையாளம் காணப்பட்டது

(துன்னாலை)

வல்வை.தொண்டமானாறு வீதியிலுள்ள பற்றைக்குள் இருந்து மீட்கப்பட்ட இளைஞரின் சடலம் இனங்காணப்பட்டுள்ளது.

சடலமாக மீட்கப்பட்டவர் துன்னாலை குடவத்தையைச் சேர்ந்த தங்கராசா தர்மகுலசிங்கம் (வயது–24) என அடையாளம் காணப்பட்டுள்ளார். இவர் அண்மையிலேயே வெளிநாடு ஒன்றிலிருந்து இலங்கை வந்ததாகத் தெரிவிக்கப்பட்டது. (எ–101)

# நாய்களுக்குத் தடுப்பூசி

(யாழ்ப்பாணம்)

யாழ்.மாநகர சபை எல்லைக்குட்பட்ட வளர்ப்பு நாய்களுக்கு விலங்கு விசர் நோய் விசேட தடுப்பு மருந்து ஏற்றுதல் யாழ்.மாநகர சபை சுகாதார வைத்திய பிரிவினால் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது.

அதனடிப்படையில் இன்று யூபிலி சிகிச்சை நிலையத்தில் காலை 8 மணிக்கும் சின்னக்கடைச் சந்தையில் 11 மணிக்கும் குருநகர் சனசமூக நிலையத்தில் 2மணிக்கும் நடைபெறவுள்ளது.

அதேபோன்று நாளை றெக்கிளமேசன் சனசமூக நிலையம், சென்மேற் சனசமூக நிலையம், பெஸ்க் சனசமூக நிலையம் ஆகியவற்றில் முறையே மேற்குறிப்பிடப்பட்ட நேரத்தில் நடைபெறவுள்ளதாக யாழ்.மாநகர சபை சுகாதார வைத்திய அதிகாரி டாக்டர் ம.மரியதாஸன் அறிவித்துள்ளார். (ச)

# ரெலிக்கொம் ஊழியர்கள் மீண்டும் பணிப்புறக்கணிப்பு?

(கொழும்பு)

ரெலிக்கொம் பணியாளர்கள் மீண்டும் பணிப்புறக்கணிப்பில் ஈடுபடப் போவதாக எச்சரித்துள்ளனர். வேதனம் உட்பட்ட பல கோரிக்கையை முன்வைத்தே இந்த எச்சரிக்கையை அவர்கள் விடுத்துள்ளனர்.

எதிர்வரும் 28 ஆம் திகதி நடைபெறவிருக்கும் பேச்சுவார்த்தையையடுத்து இப் பணிப்புறக்கணிப்புக் குறித்து தீர்மானிக்கப்படும் என ரெலிக்கொம் பணியாளர்கள் தெரிவித்துள்ளனர். (ச–133)

# இரு இளைஞர்கள் கைது

யாழ்.பண்ணை பஸ் நிலையத்திற்கு அண்மையில் வைத்து இரு இளைஞர்கள் இராணுவத்தினரால் கைது செய்து அழைத்துச் செல்லப்பட்டனர் என யாழ்.மனித உரிமை ஆணைக் குழுவில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

கைது செய்யப்பட்டவர்கள் யாழ்ப்பாணம் மடம்வீதியைச் சேர்ந்த ஹலோ ரெஸ் மிதிவெடி அகற்றும் பணியிலிருக்கும் அந்தோனி டெல்ஷன் (வயது–33) மற்றும் அயலவரான முத்துராசா அந்தோனி ஜோன்சன் (வயது–28) என தெரிவிக்கப்படுகின்றது. (ச–5)

# கொழும்பு சென்றவர்கள் ஏறாவூரில் கடத்தப்பட்டனர்

(மட்டக்களப்பு)

காத்தான்குடியிலிருந்து கொழும்பு நோக்கிப் பயணம் செய்த பஸ் ஒன்றிலிருந்து 19 பேரை ஆயுதம் தரித்த குழுவினர் கடத்திச் சென்றுள்ளனர்.

ஏறாவூர் கோரக்கல்விமடுப் பிரதேசத்தில் வைத்து இந்த நபர்கள் கடத்தப்பட்டுள்ளதாக மட்டக்களப்பு சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் தெரிவித்துள்ளார்.

நேற்று முன்தினம் 9 மணிக்கும் 10 மணிக்கும் இடையில் இவர்கள் கடத்தப்பட்டார்கள். கடத்தப்பட்டவர்களைக் கண்டு பிடிப்பதற்காக பொலிஸாரும் இராணுவத்தினரும் இணைந்து தேடுதல்களை நடத்தி வருவதாகத் தெரிவிக்கப்பட்டது.

எனினும் கடத்தப்பட்டவர்கள் தொடர்பாக இதுவரை எவ்வித தகவல்களும் கிடைக்கவில்லை. தொடர்ந்தும் தேடுதல்கள் இடம்பெற்று வருவதாக சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் மேலும் தெரிவித்துள்ளார். (ச–9)

# தமிழ் வர்த்தகர்கள் கடத்தலுக்கு அரசாங்கத்துக்குத் தொடர்பு

## எஸ்.பி.திசநாயக்க தெரிவிப்பு

தமிழ் வர்த்தகர்கள் கடத்தப்படுதல் மற்றும் கொலை செய்யப்படும் சம்பவங்களில் அரசாங்கத்துக்கு தொடர்பிருப்பதாக ஐக்கிய தேசியக் கட்சியின் முன்னணித் தலைவர்களில் ஒருவரான எஸ்.பி.திஸநாயக்க குற்றம் சாட்டியுள்ளார்.ஐக்கிய மக்கள் இயக்கத்தின் சார்பில் நடத்தப்பட்ட ஊடக மாநாட்டில் பேசுகையில் அவர் இதனைத் தெரிவித்தார். எஸ்.பி. மேலும் கூறியதாவது; மாத்தறை பகுதியில் கோடீஸ் வர தமிழ் வர்த்தகர்கள் கடத்தப்பட்டு பொல நறுவவின் மன்னம்பிட்டிய பகுதிக்கு கொண்டு செல்லப்படுகின்றனர்.

கோடிக்கணக்கான·ரூபாய் அறவிடப்பட்ட பின்னர் அவர்கள் விடுவிக்கப்படுகின்றனர். மன்னம்பிட்டியவுக்கு பொலிஸ் சோதனைச் சாவடியூடாகவே தாங்கள் கொண்டு செல்லப்பட்டதாக வர்த்தகர்கள் சுட்டிக்காட்டுகின்றனர்.

ஆகவே இக் கடத்தலில் அரசாங்கத்துக்குத் தொடர்பு இருப்பதாக சந்தேகிக்கிறோம். தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் ரவிராஜ் கொலை செய்யப்பட்ட சம்பவத்தில் தொடர்புடைய கொலையாளிகள் இன்னமும் கைது செய்யப்படவில்லை.கூட்டாசி முறைதான் இனப்பிரச் சினைக் குத் தீர்வாக இருக்க முடியும். அது தொடர்பில் மக்களுக்கு விளக்கம் அளிக்கும் பணிகள் மேற்கொள்ளப்படுகிறது. நவீன உலகில் பரவலாக ஏற்றுக்கொள்ளப்பட்ட முறைதான் கூட்டாட்சி என்றார் அவர்.

ஐக்கிய சோசலிச கட்சியின் பொதுச்செயலாளர் சிறிதுங்க ஜயசூரிய,ஐக்கிய தேசியக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் தயசிறி ஜயசேகர,மேலக மக்கள் முன்னணியின் தலைவர் மனோ கணேசன் உள்ளிட்டோர் இந்த ஊடக மாநாட்டில் பங்கேற்றனர். (எ-5)

# கண்ணீர் அஞ்சலி

கொக்குவில் இந்துக்கல்லூரி பழைய மாணவர் சங்கத்தலைவர்

"தெய்வசித்தன்"

## இராசரத்தினம் நடராசா

அவர்களின் பிரிவால் துயறுற்றிருக்கும் குடும்பத்தினருக்கு ஆழ்ந்த அனுதாபங்களை தெரிவிப்பதோடு அவரின் ஆத்மா சாந்தியடைய இறைவனை பிரார்த்திப்போமாக.

ஓம் சாந்தி! சாந்தி!!

பழைய மாணவர் சங்கம்,
கொக்குவில் இந்து ஆரம்ப பாடசாலை.

(C-572)

# கண்ணீர்க் காணிக்கை

கொக்குவில் இந்துக்கல்லூரி பழைய மாணவர் சங்கத்தலைவரும், கொக்குவில் மஞ்சவனப்பதி ஆலய நிர்வாக சபைஉபதலைவருமான முன்னாள் பொறியியலாளர்

"தெய்வசித்தன்" "திருப்பணிக்கரசு"

## இராசரத்தினம் நடராசா

அவர்கள் நேற்று சிவபத மடைந்த செய்தியை அடுத்து பேரதிர்ச்சி யும் ஆழ்ந்த கவலையும் அடைந்தோம். அன்னாரின் பிரிவால் துயருற்றிருக்கும் அவரது குடும்பத்தினருக்கு ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்வதோடு அவ ரின் ஆத்மா சாந்தியடைய மஞ்சவனப்பதி முருகப்பெருமானின் பாதார விந்தங்களை பிரார்த்திப்போமாக.

ஓம் சாந்தி ! சாந்தி!!

கொக்குவில் மேற்கு
கொக்குவில்

திருமதி தம்பித்துரை குடும்பம்
(ஓய்வுபெற்ற நீதிமன்ற முதலியார்)

(C-571)

# கண்ணீர் அஞ்சலி

கொக்குவில் இந்துக்கல்லூரியின் பழைய மாணவர் சங்கத்தலைவரும், பழைய மாணவர் சங்க நம்பிக்கை நிதிய அறங்காவலர் சபைத் தலைவரும்,பொது நல சேவையாளருமான

"தெய்வசித்தன்"

## இராசரத்தினம் நடராசா

அவர்கள் நேற்றுக் காலமானார். அவரது மறைவையிட்டு கொக்குவில் இந்துக் கல்லூரி சமூகம் கவலை அடைந்துள்ளது.

அன்னாரின் மறைவினால் துயறுற்றிருக்கும் அவரது குடும்பத்தினருக்கு ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்வதுடன் அன்னாரின் ஆத்மா சாந்தியடைய கொக்குவில் இந்துக்கல்லூரி சமூகத்தின் குல தெய்வமான கிருபாகர சிவசுப்பிரமணிய சுவாமிகளை வேண்டி நிற்கின்றோம்.

கொக்குவில் இந்துக்கல்லூரி
பழைய மாணவர் சங்கம்,
பழைய மாணவர் சங்க நம்பிக்கை
நிதிய அறங்காவலர் சபை.

(C-570)

# பெறுபேறுகள் எடுத்துவரப்பட்டன

(யாழ்ப்பாணம்)

5 ஆம் ஆண்டு புலமைப்பரிசில் பரீட்சை பெறுபேறுகள் நேற்றைய தினம் கொழும்பிலிருந்து விடேச விமானம் மூலம் யாழ்ப்பாணத்திற்கு எடுத்துவரப்பட்டுள்ளதாக யாழ். வலயக்கல்விப் பணிப்பாளர் வி.ரி.செல்வரத்தினம் தெரிவித்தார்.

இப் பெறுபேறுகள் நேற்றைய தினம் அனைத்து வலயங்களுக்கும் அனுப்பப்பட்டுள்ளதுடன் இன்று அனைத்துப் பாடசாலைகளிற்கும் விநியோகிக்கப்படுமெனவும் அவர் தெரிவித்தார்.

இதேவேளை இவ் விடேச விமானத்தில் எதிர்வரும் 24 ஆம் திகதி யாழ்.மாவட்டத்தில் நடைபெறவுள்ள கட்டடத்திணைக்கள இலங்கை தொழில் நுட்பவியல் சேவையின் தொழில் நுட்பவியல் அலுவலர் (சிவில்) தொழில் நுட்பவியல் அலுவலர் (மின்) மற்றும் படவரைஞர் பதிவுக்கான ஆட்சேர்ப்பு செய்வதற்கான பரீட்சை வினாத்தாள்களும் இவ் விமானத்தில் எடுத்துவரப்பட்டதாக அவர் தெரிவித்தார். (ச-133)

## அரச...

ஆம் ஆண்டு மாணவர்கள் மேலதிக பாடமாகவும் 3 ஆம் ஆண்டு முதல் வாய் மொழி மூலமான பாடமாகவும் இரண்டு மொழிகளையும் கற்கவேண்டுமென்று கல்வியமைச்சு விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த பாடத்திட்டத்தை செயற்படுத்த பாடசாலைகளில் போதிய ஆசிரியர்கள் இல்லை என்றும் அடுத்த வருடம் அதற்கு வேண்டிய ஆசிரியர்கள் சேவையில் இணைத்துக் கொள்ளப்படுவார்கள் என்றும்,

தேசிய ஒருங்கிணைப்பு திட்டத்தின் கீழ் செயற்றிட்டம் மேற்கொள்ளப்படுவதாக கல்வியமைச்சு விடுத்துள்ள அறிக்கையில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளது. (ச-9)

## திருமலைக்...

யாழ்.போதனா வைத் தியசாலைக்கு அனுப்பிவைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள் ளதாகவும் தெரிவிக்கப்படு கிறது. இக் கப்பலில் 334 பயணிகள் யாழ். வந்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (ச-5)

## மலையகத்தில்...

பெயர்ந்த சிங்கள மக்களுக்காக எதனையுமே செய்யவில்லை. மலை யகத்தில் மேற்கொள்ளப்பட்டிருக்கும் ஒப்பந்தங்களை பாதுகாப்பதுடன் தேசப் பாதுகாப்புக்காக தொழிலாளர்களை அரசாங்கம் பாதுகாக்க வேண்டும் என்று ஜாதிக ஹெல உறுமயவின் அறிக்கையில் கூறப்பட்டுள்ளது. (ச-5)

## யாழ்.மக்களின்...

ஜனாதிபதி செயலகம் விடுத்துள்ள செய்திக்குறிப்பு வருமாறு;

அரசாங்க ஆஸ்பத்திரிகளுக்கு போதிய மருந்துப் பொருட்கள் வழங்குவதற்கும் தற்போது யாழ்.நகரத்தின் தனியார் மருந்தகங்களில் ஏற்பட்டுள்ள மருந்துத் தட்டுப்பாட்டை தீர்ப்பதற்கு அரசாங்க ஒசுசல மூலம் அவற்றுக்கு மருந்துப் பொருட்களை வழங்குவதற்கும் மீனவர்களின் நலன்கருதி மீன்பிடி வளங்களைப் பெற்றுக்கொள்வதற்கான வரையறைகளை விஸ்தரிப்பதற்கும் இரண்டு விமானச் சேவை நிறுவனங்கள் மூலம் யாழ்ப்பாணத்திற்கும் கொழும்புக்குமிடையே விமான போக்குவரத்துச் சேவையை விஸ்தரிப்பதற்கும் நாள் முழுவதும் மின்சார விநியோகத்தை வழங்குவதற்குமான நிரந்தர மின்சாரத் திட்டம் ஒன்றை ஏற்படுத்துவதற்கும் நடவடிக்கை எடுக்கப்படுகிறது.

சமூக சேவை சமூக நலனோம்புகை அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தலைமையின் கீழ் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவின் அறிவுறுத்தலின் பேரில் யாழ்ப்பாணத்தின் உண்மை நிலையைக் கண்டறிவதற்காக நேற்று அமைச்சர்கள் உள்ளிட்ட அரசாங்கத்தின் உயர் மட்ட அதிகாரிகள் குழுவொன்று யாழ்.புறப்பட்டுச் சென்று யாழ்.நூலக கேட்போர் கூடத்தில் அங்குள்ள அரசாங்கப் பிரதிநிதிகளுடன் விசேட கலந்துரையாடல் ஒன்றில் ஈடுபட்டனர்.

சர்வதேச விவகாரங்களுக்கான ஜனாதிபதியின் ஆலோசகர் பசில் ராஜபக்ஷ தலைமையின் கீழ் இடம் பெற்ற இக் கலந்துரையாடலில் யாழ்ப்பாணத்தில் சுமூகவாழ்க்கையை ஏற்படுத்துவதற்குத் தேவையான முக்கிய 16 துறைகள் தொடர்பில் எழுந்துள்ள பிரச்சினைகள், அவற்றுக்குப் பெற்றுக் கொடுக்கக்கூடிய உடனடித்தீர்வுகள் குறித்து சுமார் மூன்று மணித்தியாலங்கள் வரை கலந்துரையாடப்பட்டது.

யாழ்ப்பாண மக்களுக்குத்தேவையான உணவுப் பொருட்களான அரிசி, கோதுமை மா, பருப்பு, பால்மா போன்றவற்றை உடனடியாகப் பெற்றுக்கொடுப்பதற்கு முறையான வேலைத்திட்டம் ஒன்றைச் செய்தல்.

போதியளவு பெற்றோல், டீசல், எரிபொருள்களைப் பெற்றுக்கொடுப்பதற்கு நடவடிக்கை எடுத்தல்,பிரதேசத்தில் உள்ள நலனோம்புகை விற்பனை கட்டமைப்பை தரப்படுத்துதல்,விவசாயத்தொழில் நுட்ப உற்பத்திகளை உடனடியாகவும் பழுதடையாமலும் சந்தைக்குப் பெற்றுக்கொடுப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் போன்ற நடவடிக்கைகள் இங்கு மேற்கொள்ளப்பட்டன.

யாழ்.குடாநாட்டின் மின்சார தேவைகளை பூரணமாக நிறைவேற்றிக்கொள்வதற்கு தேவையான அளவு மின்திட்டங்களை எதிர்வரும் ஆறு மாதத்திற்குள் நடைமுறைப்படுத்துவதற்கும் இங்குதீர்மானிக்கப்பட்டது.

தற்போது யாழ்ப்பாணத்தில் மின்சாரத் தேவைகளை நிறைவேற்றிக்கொள்வதற்கு மெ.வோ.30 மெகாவோட் தேவைப்படுகின்றது. இதில் 15 மெ.வோட்டில் 13.5 மெ.வோட் தனியார் துறைமூலம் பெற்றுக்கொள்ளப்படுகின்றது.எஞ்சிய 1.5 மெ.வோட் இலங்கை மின்சார சபையினால் பூர்த்திசெய்யப்படுகிறது.யாழ்.விவசாயிகளுக்குத் தேவையான உரம் கிருமிநாசினி ,விவசாய உபகரணங்கள் போன்றவற்றுக்குத் தேவையான அளவு வழங்குவதற்கும் தெரிவு செய்யப்பட்ட குடும்பங்களுக்கு ஆடுகள்,கோழிகள் மற்றும் உயர் தர பசுமாடுகள் போன்றவற்றைப் பெற்றுக்கொடுத்தல், அவர்களது புகையிலை உற்பத்திகளை கப்பல் மூலம் கொழும்புக்குக் கொண்டுவருவதற்கான விடயங்கள் குறித்தும் ஆராயப்பட்டன.

மேலும் யாழ்ப்பாணத்தில் உள்ளூர் போக்குவரத்துக் கட்டமைப்பை மேம்படுத்துதல், மக்கள் போக்குவரத்துச் சேவையை விஸ்தரித்தல், விசேடமாக பாடசாலை மாணவர்களுக்கான போக்குவரத்து வசதிகளை மேம்படுத்தல் போன்றன குறித்தும் இங்கு தீர்மானம் எடுக்கப்பட்டது.

யாழ்ப்பாணம் ,நல்லூர் ,கோப்பாய், சண்டிலிப்பாய், தெல்லிப்பழை ,சங்கானை, கரவெட்டி ,பருத்தித்துறை ,மருதங்கேணி, உடுவில், சாவகச்சேரி ,வேலணை, ஊர்காவற்றுறை, காரைநகர் மற்றும் நெடுந்தீவு போன்ற 15 பிரதேசசெயலாளர் பிரிவுகளை உள்ளடக்கும் வகையில் சமுர்த்தி நலன்களைப் பெற்றுக்கொடுப்பதற்கு முறையான நடவடிக்கை ஒன்றை மேற்கொள்வதற்கும் கலந்துரையாடலின்போது விசேட கவனம் செலுத்தப்பட்டுள்ளது.

இக்கலந்துரையாடலின் பின்னர் காங்கேசன்துறை துறைமுகத்தில் மேற்கொள்ளப்பட்டு வரும் நடவடிக்கைகள் மற்றும் அதன் குறைபாடுகளை நேரில் சென்று பார்ப்பதற்காக பிரதிநிதிகள் அங்கு விஜயம் செய்தனர்.

அதன் பின்னர் யாழ்ப்பாணத்தில் உள்ள பிரபல மாவிட்ட புரம் கந்தசுவாமி கோயிலுக்கு விஜயம் செய்த பிரதிநிதிகள் குழு நாட்டுக்கு சமாதானம் வேண்டி அங்கு விசேட சமய வழிபாடுகளில் ஈடுபட்டனர்.

கந்தசாமி கோவிலின் பிரதம குருக்களான எஸ்.டி.சண்முகநாதனின் வேண்டுகோளின் பேரில் ஜாதிக சவிய வேலைத்திட்டத்தின் கீழ் அக்கோவிலின் புனர்நிர்மாணப் பணிகளை மேற்கொள்வதற்குத் தேவையான உதவிகளை வழங்குவதாக ஜனாதிபதியின் ஆலோசகர் பசில் ராஜபக்ஷ உறுதியளித்தார்.

வட கிழக்கு ஆளுநனர் மொஹான் விஜேவிக்கிரம, அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா ,பிரதியமைச்சர்களான நிர்மல கொத்தலாவல,மேர்வின் சில்வா,ரோஹன திஸாநாயக்க ,ஜெயரட்ண ஹேரத் ,வடிவேல் சுரேஸ், ஜகத் புஸ்பகுமார ,துமிந்த திஸ்ஸநாயக்க மற்றும் சம்பிக ரணவக்க பாதுகாப்புத்தலைமை அதிகாரி எயார் வைஸ் மார்சல் டொனால் பெரேரா ,இராணுவத்தளபதி லெப்டினன் ஜெனரல் சரத்பொன்சேகா ,பொலிஸ்மா அதிபர் விக்டர் பெரேரா,கடற்படைத் தலைமையக பணிப்பாளர் நாயகம் (நடவடிக்கை) ரியல் அட்மிரல் ரி.எஸ்.ரி.சமரசிங்க போன்றோர் உள்ளிட்ட பாதுகாப்புத் துறை பிரமுகர்களும் அமைச்சுக்களின் செயலாளர்களும் அரச நிறுவனங்களின் உயர் அதிகாரிகள் உள்ளிட்ட குழுவும் இவ் விஜயத்தின்போது பங்கேற்றனர். (ச)

இப்பத்திரிகை வலம்புரி அன்.கோ ஸ்தாபனத்தாரால் இல.3 இரண்டாம் ஒழுங்கை பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 22.12.2006 இல் அச்சிட்டுவெளியிடப்பட்டது.